20 JANUARY 2026 | *Report Summary*

# இலங்கையில் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் எவ்வளவு சிறப்பாகச் சமூகத் தாக்கங்களை அறிக்கையிடுகின்றன?

## நினைவில் கொள்ளவேண்டிய கருத்துக்கள்

- சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் பல்வேறு பயனாளர்களையும் பயன்களையும் கொண்டுள்ளன. கருத்திட்டங்களால் ஏற்படும் தாக்கங்கள் பற்றிச் சமுதாயங்கள் கரிசணை கொண்டுள்ளன. கருத்திட்டத்தின் நிலைபேறானதன்மை பற்றிப் புரிந்துகொள்வதில் முதலீட்டாளர்கள் அக்கறை கொண்டுள்ளனர். எனவே, மக்களுக்கும் இயற்கைக்கும் நியாயமானதாக இருக்கும் தீர்மானங்களை எடுப்பதற்குச் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் உறுதியானவையாகவும் அணுகத்தக்கவையாகவும் இருப்பது இன்றியமையாததாகும்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டில் மதிப்பிடப்படும் சுற்றாடலானது உயிர் – பௌதிகவிபௌதிகவியல் காரணிகளை மாத்திரம் உள்ளடக்காமல் சமூக பொருளாதாரக் காரணிகளையும் உள்ளடக்குகின்றது. கடந்த காலங்களில் முறையாக மேற்கொள்ளப்படாத சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் சமுதாயங்களைப் பாதித்துக் கருத்திட்டங்களை முடக்கியுள்ள போதிலும் கூட, தற்போதுள்ள ஆய்வுகளில் சமூகத் தாக்க அறிக்கையிடலின் தரம் தொடர்பாக அற்பமான அவதானமே செலுத்தப்பட்டுள்ளது. எமது ஆய்வு இந்தப் பாரிய குறைபாட்டினை நிவர்த்தி செய்கின்றது.
- சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளில் சமூகத் தாக்கம் பற்றிய அறிக்கையிடலின் தரம் மிகவும் குறைவாக இருக்கின்றது என இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது. பயன்படுத்தப்படும் முறைகளும் தரவு மூலங்களும் உரிய முறையில் அறிக்கையிடப்படுவதில்லை என்பதுடன் அறிக்கைகளில் பயன்படுத்தப்படும் முறைவடிவமும் மொழியும் பொதுமக்களால் அணுக முடியாதவையாக உள்ளன. ஒழுங்குறுத்துனர்களால் வழங்கப்படும் ஆய்வு வழிகாட்டல்கள் (வழுசு) மற்றும் ஆவணங்களில் உள்ள தரம் சார்ந்த தேவைப்பாடுகள் பொருத்தமற்றவையாக உள்ளன.
- மதியுரைஞர்களின் பயிற்சியினையும் விழிப்புணர்வினையும் முன்னேற்றுவதற்கும் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் பொதுமக்களால் அணுகக்கூடியவையாக இருப்பதை அதிகரிப்பதற்கும் சுற்றாடல் தாக்கச் செயன்முறையின் தரக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையினை வலுப்படுத்துவதற்கான அவசரத் தேவையுள்ளது.

அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கும் சுற்றாடல் பாதுகாப்புக்கும் இடையில் பாதுகாப்பினை வலுப்படுத்தி அவற்றுக்கிடையில் சமனிலையினை உறுதிப்படுத்துவதற்குச் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் இன்றியமையாத பொறிமுறைகளாகும். கணிசமான சுற்றாடல் தாக்கங்களை ஏற்படுத்தும் சாத்தியத்துடன் சுற்றாடல் தாக்க மதிப்பீடு சகல கருத்திட்டங்களுக்கும் கட்டாயமானதாகும். சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் உயிர் - பௌதிகவியல் சூழலை மாத்திரமன்றி சமூகச் சூழலையும் மதிப்பிட வேண்டும் என்ற போதிலும் இலங்கையில் பொதுவாக அந்த மதிப்பீடுகளும் அவை குறித்த விமரிசனங்களும் உயிரியல் - பௌதிகச் சூழலை மாத்திரமே மையமாகக் கொண்டுள்ளன.

“மதிப்பீடுகளை மதிப்பிடல்: இலங்கையில் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளில் அறிக்கையிடப்பட்டுள்ள சமூகத் தாக்கங்களின் மதிப்பீடு” என்ற தலைப்பில் CSF அண்மையில் வெளியிட்ட ஆய்வு அறிக்கையே இவ்வகையினைச் சேர்ந்த முதலாவது முறைமை வாய்ந்த மதிப்பீடாகும் என்பதுடன் இது 1991 - 2025 காலப்பகுதியின் போதான 250 சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளின் விரிவான மீளாய்வினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு வழிகாட்டல்களிலும் சம்பந்தப்பட்ட ஆய்வு வழிகாட்டல்களிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள தரத் தேவைப்பாடுகளுக்குச் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள் இயைபுறுகின்றனவா என்பதை மதிப்பிடுவதற்காகச் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒவ்வொன்றும் தனித்தனியாக மீளாய்வு செய்யப்பட்டுப் பிரதான பரிமாணங்களின் அடிப்படையில் அவற்றுக்குப் புள்ளி வழங்கப்பட்டன. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையிடலின் தரத்தினைப் பாதிக்கும் காரணிகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டுள்ளமையும் நாட்டில் ஏற்பட்ட திட்வா சூறாவளியும் அவசியம் பல புதிய கருத்திட்டங்களையும் பரந்த வீச்சிலான புதிய முதலீடுகளையும் கொண்டுவரும் என்பதால், கருத்திட்டங்களால் பாதிப்படைவதற்கான சாத்தியமுள்ள சமுதாயங்களுக்கு உத்தேசக் கருத்திட்டங்களால் ஏற்படக்கூடிய தீங்குகளைக் குறைப்பதற்கும் எதிர்காலத்தில்

ஏற்படக்கூடிய காலநிலையுடன் தொடர்புடைய அனர்த்த நிகழ்வுகளுக்கான மீண்டெழுந்தன்மையினை அதிகரிப்பதற்கும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள் வலுவான சமூகத் தாக்கப் பகுப்பாய்வுகளைக் கொண்டிருப்பது இன்றியமையாததாகும்.

### சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளில் சமூகத் தாக்க அறிக்கையிடலின் தரத்தினை மதிப்பிடுவதற்கான தேவை

பாரிய அளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தியே இலங்கையின் பொருளாதார வளர்ச்சி அனுபவத்தின் தலையாய பாகமாக இருந்து வருகின்றது. இவ்வாறான கருத்திட்டங்களின் அளவின் காரணமாக இவை சுற்றுச் சூழலைக் கணிசமாக மாற்றும் சாத்தியத்தினைக் கொண்டுள்ளன. எனவே, பாதகமான தாக்கங்களைத் தவிர்க்கும் வகையில் அல்லது குறைக்கும் வகையில் கருத்திட்டங்கள் வடிவமைக்கப்படுவது இன்றியமையாததாகும். எவ்வாறாயினும், மோசமாக வடிவமைக்கப்பட்ட கருத்திட்டங்கள் பொருளாதாரச் சுமையாக அமைவதோடு மாத்திரமன்றி அவை உள்ளூர்ச் சமுதாயங்களை இடம்பெயரச் செய்து இலங்கையின் அழிவடைந்து வரும் இயற்கைச் சூழலுக்குப் பாரதூரமான தீங்கினை ஏற்படுத்துகின்றன என்பதையே கடந்த தசாப்தங்களில் இலங்கையின் உட்கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி அனுபவங்கள் கோடிட்டுக்காட்டுகின்றன.

உத்தேச கருத்திட்டங்களினால் ஏற்படுத்தப்படக்கூடிய தீங்குகளை எதிர்வுகூறி அவற்றினைக் குறைப்பதற்குச் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளே முன்னோடியான பொறிமுறையாகும். அதிகார அமைப்புக்கள் ஒரு கருத்திட்டத்தினை அங்கீகரிக்க முன்னர், வரைபு அறிக்கையானது பொதுமக்களின் மீளாய்வுக்காக வெளியிடப்படுகின்றது. நிதி நிறுவனங்களும் அபிவிருத்திப் பங்காளர்களும் கடன் வழங்கும் தீர்மானங்களை எடுக்கும்போது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளைப் பயன்படுத்துகின்றனர். எனவே பல்வேறு மட்டங்களிலான தொழில்நுட்ப நிபுணத்துவத்தினையும் கருத்திட்டத்துடனான நெருக்கத்தினையும் கொண்ட பரந்த அளவிலான பங்குதாரர்கள் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளைச் சார்ந்துள்ளனர். எனவே, பங்குதாரர்கள் அறிக்கையில் இருந்து மிகச் சிறந்த பயனைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்குச் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள் வலுவானவையாகவும் அணுகத்தக்கவையாகவும் இருப்பது இன்றியமையாததாகும்.

எவ்வாறாயினும், சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளில் அறிக்கையிடலின் தரம் பொதுவாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது. சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளில் முறையாக நடத்தப்படாத சமூகத் தாக்கப் பகுப்பாய்வுகள் உள்ளூர்ச் சமுதாயங்களை மோசமாகப் பாதித்துள்ள பல சம்பவங்களைத் தனிப்பட்ட அனுபவச் சான்றுகளும் பொதுமக்கள் சொல்லாடலும் கோடிட்டுக்காட்டியுள்ளன. ஆங்காங்கே தனித்தனியாக மேற்கொள்ளப்படும் கல்விசார் ஆய்வுகளுக்கு அப்பால், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையிடலின் தரம் தொடர்பாகக் குறிப்பிட்ட காலப்பகுதியில் முறைமை வாய்ந்த பகுப்பாய்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என இந்த ஆய்வினால் இதற்கு முன் வெளியிடப்பட்ட ஆய்வுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வு கண்டறிந்துள்ளது. மேலும், ஏற்கனவே செய்யப்பட்டுள்ள ஆய்வுகளும் மிகப் பெரும்பான்மையாக உயிர் - பௌதிகவியல் அம்சங்களிலேயே கூர்மையான கவனத்தினைச் செலுத்துகின்றன. எனவே, சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளில் சமூக பொருளாதாரத் தாக்கங்களை அறிக்கையிடுவதின் தரம் மிக மோசமான அளவு குறைவாகவே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

### CSF அறிக்கை எதை ஆராய்ந்துள்ளது

இலங்கையில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையிடல் தொடர்பாகத் தற்போது காணப்படும் ஆவணங்களையும் வழிகாட்டல்களையும் இந்த அறிக்கை மீளாய்வு செய்கின்றது. இது மதிப்பீட்டு முறையியலை வரையறை செய்து ஆய்வினால் நடத்தப்பட்ட மூன்று வகையான பகுப்பாய்வுகளில் இருந்து கண்டறியப்பட்டவற்றினை உள்ளடக்குகின்றது: (1) மதிப்பீட்டுப் பெறுபேறுகளின் விபரிப்புக்கள் (2) இரு வெவ்வேறான விடயங்கள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புறுகின்றன என்பது பற்றிய பகுப்பாய்வு (3) பண்புசார் அவதானிப்புக்கள். இறுதியாக, இந்த ஆய்வின் பெறுபேறுகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட, கொள்கை வகுத்தலுக்குப் பொருத்தமான முக்கிய பரிந்துரைகளை இந்த ஆய்வு முன்வைக்கின்றது.

### சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையிடலின் தரம் தொடர்பான சட்டத் தேவைப்பாடுகள்

இலங்கையில் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளை ஆளுகை செய்கின்ற சட்ட வரையறைகள் சிதறுண்டு காணப்படுகின்றன. இதில் நான்கு சட்டங்கள் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைந்து செயற்படுகின்றன:

1. 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கத் தேசிய சுற்றாடல் சட்டம் (NEA)
2. 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கக் கரையோரப் பாதுகாப்புச் சட்டம்
3. 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வட மேல் மாகாணச் சுற்றாடல் நியதிச்சட்டம்
4. 1993 ஆம் ஆண்டின் தாவர மற்றும் விலங்கினப் பாதுகாப்புச் சட்டம்

தேசிய சுற்றாடல் சட்டத்தினை அமுல்படுத்தும் பிரதான அமைப்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை உள்ளது. தேசிய சுற்றாடல் சட்டமும் அதனுடன் சேர்ந்த ஒழுங்குவிதிகளும் அவற்றுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளும் சேர்ந்து, உள்நாட்டுச் சட்டங்களினால் தாபிக்கப்பட்ட சகல சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறைகளுக்குமான கட்டமைப்பினை வழங்குகின்றன. மேலும், ஏனைய மூன்று சட்டங்களுக்கும் பொறுப்பான அமைப்புக்கள் அவற்றின் சம்பந்தப்பட்ட நியாயாதிக்கங்களினுள் சுற்றாடல் தாக்க மதிப்பீடு தொடர்பான செயற்பாடுகளை அமுல்படுத்துகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளையும் சட்டகங்களையுமே வழமையாகப் பின்பற்றுகின்றன.

சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் பற்றிய இலங்கைச் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் அந்த மதிப்பீடுகளின் தரம் தொடர்பான தேவைப்பாடுகளைக் கட்டாயமானதாக ஆக்கவில்லை. மாறாக, இரண்டு பிரதான மூலங்களின் மூலம் தரத் தேவைப்பாடுகள் வழங்கப்படுகின்றன: (1) மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு வழிகாட்டல் ஆவணங்கள் (2) ஒவ்வொரு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுக்குமென வழங்கப்பட்டுள்ள ஆய்வு வழிகாட்டல்கள்.

### ஆய்வுக் குறிக்கோள்கள் மற்றும் முறையியல்

1991 ஆம் ஆண்டுக்கும் 2025 ஆம் ஆண்டுக்கும் இடையில் நடத்தப்பட்ட 250 சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் எவ்வாறு சமூகத் தாக்கங்களை அறிக்கையிட்டன என்பதை இந்த ஆய்வு மதிப்பிடுகின்றது. பின்வருவனவற்றின் மூலம் இது இலங்கையில் சான்றடிப்படையிலான தீர்மானம் வகுத்தலுக்கு ஆதரவளிக்கின்றது:

1. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் சமூகத் தாக்க மதிப்பீட்டு நடைமுறையின் தற்போதைய நிலையினைத் தரவுகளின் அடிப்படையில் வழங்குதல்
2. சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளின் அறிக்கையிடல் தரத்தில் உள்ள ஆரம்பப் போக்குகளை மதிப்பிட்டு பிரதான பங்குதாரர்களுக்கு முன்னுரிமைப் பரிந்துரைகளை முன்மொழிதல்
3. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக விசாரணைக்கான வழிகளைக் கோடிட்டுக்காட்டுவதன் மூலம் இலங்கையில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளின் முறைமை வாய்ந்த பகுப்பாய்வின் நோக்கெல்லையினை விரிவுபடுத்துதல்.

சர்வதேச ஆவணங்களில் காணப்படும் மீளாய்வுக்கான தெரிவடிப்படையினை அடிப்படையாகக் கொண்ட தரத்துக்கான இலட்சியவாத நியமங்களைத் திணிப்பதற்கு பதிலாக, தேசிய முறைமையினால் எதிர்பார்க்கப்படும் உண்மையான தரத் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளை ஆய்வு மதிப்பிட்டது.

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளின் பல பயன்பாடுகளும் பயனாளர்களும் அதனுடன் சேர்ந்த, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு வழிகாட்டல்களாலும் ஆய்வு வழிகாட்டல்களாலும் கோடிட்டுக்காட்டப்படும் தேவைப்பாடுகளும் இரண்டு வகையான பரிமாணங்களின் ஊடே அறிக்கையிடல் தரத்தினைப் பரிசீலிக்குமாறு மதிப்பீடுகளுக்கு அகத்தூண்டுதல் வழங்கியுள்ளன. 1) தேவைப்பாடுகள் மற்றும் 2) பண்புகள்.

தேவைப்பாடுகள் என்பவை ஒரு வழமையான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டில் இருந்து எதிர்பார்க்கப்படும் சமூக மதிப்பீடுகளின் மூன்று அடிப்படைக் கூறுகளாகும்.

கருத்திட்டம் தொடர்பான பல்வேறு வகையான தொழில்நுட்ப நிபுணத்துவத்தினையும் கருத்திட்டத்துடனான பலவாறான நெருக்கத்தினையும் கொண்ட வெவ்வேறு பங்குதாரர்கள் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளை அர்த்தபூர்வமாகப் பயன்படுத்துகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு இன்றியமையாத அறிக்கையிடல் தரத்தின் மூன்று பரிமாணங்களே பண்புகளாகும்.

தேவைப்பாடு அடிப்படையிலான மூன்று பரிமாணங்களையும் நிறைவேற்றுவதை வழிகாட்டல்களும் ஆய்வு வழிகாட்டல்களும் தெளிவாகக் குறித்துரைக்கையில் சில பண்படிப்படையிலான பரிமாணங்களே தெளிவாக வேண்டப்படுகின்றன. ஏனைய பண்புகள் வழிகாட்டல்களிலும் ஆய்வு வழிகாட்டல்களிலும் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**மதிப்பிடப்பட்ட பரிமாணங்களும் அம்சங்களும்**

**1. தேவைப்பாடுகள்**

தற்போதுள்ள சூழல் பற்றிய விபரிப்பு:

• பயன்படுத்தப்படும் முறையியல்கள் அறிக்கையிடப்படுகின்றனவா?
• புறப் பகுப்பாய்வு ரீதியான ஆய்வுகள் பயன்படுத்தப்பட்டனவா?

அடையாளப்படுத்தல், பகுப்பாய்வு மற்றும் தாக்கங்களின் மதிப்பீடு:

• பயன்படுத்தப்பட்ட முறையியல்கள் அறிக்கையிடப்படுகின்றனவா?
• முக்கியமான தாக்கங்கள் வகைப்படுத்தப்பட்டனவா?
• அவ்வாறாயின், வகைப்படுத்தலுக்கான வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டனவா?

உத்தேச தணிப்பு முறைகள்:

• உத்தேச தனிப்பு முறைகளின் செயற்திறன் அறிக்கையிடப்படுகின்றதா?
• தணிப்பு முறைகளை முன்மொழிவதற்கான தர்க்கரீதியான காரணம் வழங்கப்படுகின்றதா?

**2. பண்புகள்**

அணுகக்கூடிய தன்மை:

• சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளும் செறிவான தொகுப்பும் எவ்வளவு நீளமானவை?
• செறிவான தொகுப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளது தொழில்நுட்ப மொழியா?

உறுதிப்படுத்தக்கூடிய தன்மை:

• பயன்படுத்தப்பட்ட முறையியல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளனவா?
• கணிப்பீடு ஒன்று நடத்தப்பட்டால், மாதிரிப்படுத்தலுக்கு அவசியமான முக்கியமான தகவல்கள் வழங்கப்படுகின்றனவா?

வாய்மை:

• வரம்புகளும் ஊகங்களும் வெளிக்கூறப்பட்டுள்ளனவா?
• செறிவான தொகுப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி நடுநிலையானதா?

**வரம்புகளும் கருதுகோள்களும்**

- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளின் (மற்றும் குறைநிரப்பல் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள்) ஆங்கிலப் பதிப்புருக்கள் மாத்திரமே மதிப்பிடப்பட்டன, பூர்வாங்கச் சுற்றாடல் பரிசோதனைகள் அல்ல (IEEs).
- அபிவிருத்திப் பங்காளரின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு வழிகாட்டல்களில் தரத் தேவைப்பாடுகள் பரிசீலிக்கப்படவில்லை.

## கண்டறிந்த பிரதான விடயங்கள்

### *1. மிகச் சொற்பமான அறிக்கைகளே அவதானிப்புக்களுக்கு ஆதாரமாகப் புறப் பகுப்பாய்வினைப் பயன்படுத்துகின்றன*

அறிக்கைகளில் 71% மானவை விபரங்களடங்கிய புள்ளிவிபரங்களை அறிக்கையிடுவதற்கு தகவல்களின் புற மூலங்களை மாத்திரம் பயன்படுத்துகின்றன. உத்தேசக் கருத்திட்ட இடத்தினைச் சுற்றிக் காணப்படும் சூழலின் குடிசனவியல் மற்றும் சமூக – பொருளாதாரக் காரணிகள் பற்றிய, கிராம சேவையாளர்கள் போன்ற உள்ளூர் நிர்வாகத் தரவுத்தளங்களில் இருந்து பெறப்பட்ட மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட வள விபரங்களில் இருந்து பெறப்பட்ட தரவு அட்டவணைகள் பொதுவாகக் காணப்படுகின்றன.

சமூக – பொருளாதார அம்சங்கள் தொடர்பாகக் காணப்படும் ஆவணங்களின் பகுப்பாய்வினை வெறும் 10 சதவிகிதமானவை மாத்திரமே மேற்கோள் காட்டுகின்றன. எனவே, தற்போதுள்ள சமூகச் சூழல் பற்றிய பிரிவுகள் தேவையற்ற விளக்கங்கள் நிறைந்தவையாக இருப்பதோடு மாத்திரமன்றி அதிகமான அறிக்கைகளில் இவ்வாறான பிரிவுகள் எவ்விதமான புறக் கண்ணோட்டங்களும் இன்றிச் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளைத் தயாரிப்பவர்களின் தரவுகளையும் வியாக்கியானங்களையுமே முற்றுமுழுவதும் சார்ந்துள்ளன என்பதையும் காட்டுகின்றன.

### *2. சமூகத் தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வதிலும் அறிக்கையிடுவதிலும் கணிசமான குறைபாடுகள் உள்ளன*

ஆய்வு வழிகாட்டல்களில் 91 சதவிகிதமானவை சமூகத் தாக்கங்களை மதிப்பிட்டு அறிக்கையிட வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்ற போதிலும், அறிக்கையிடல் தேவைப்பாடுகளின் சில குறிப்பிட்ட அம்சங்களில் ஆய்வு வழிகாட்டல்கள் மிகவும் ஒத்திசைவற்றவையாகக் காணப்படுவதுடன் ஆய்வு வழிகாட்டல்களில் 17 சதவிகிதமானவை முறையியல்களையோ அல்லது தாக்கங்களின் வகைப்படுத்தலையோ அறிக்கையிடவேண்டும் எனத் தேவைப்படுத்தாதிருக்கின்றன. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் 45% தாக்கங்களை அடையாளப்படுத்தி மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் முறையியல் பற்றி எவ்விதமான விளக்கத்தினையும் கொண்டிருப்பதில்லை. சமூக - பொருளாதாரத் தாக்கங்கள் பொதுவாக மறைமுகமானவையாகவும் அளக்க முடியாதவையாகவும் உறுதியற்றவையாகவும் இருக்கின்ற காரணத்தினால் இது குறிப்பாகக் கரிசணைக்குரியதாக உள்ளது. எனவே, முறையியல் பற்றிய தெளிவின்மையானது இவ்வாறான அறிக்கைகளில் உள்ளடங்கும் மதிப்பீடுகளை அர்த்தபூர்வமாக நுண்ணாய்வு செய்யும் வாசகரின் ஆற்றலைப் பாதிக்கின்றது.

சமூகத் தாக்கங்களை அறிக்கையிட்டுள்ள சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் அதிகமானவை (52%) சமூகத் தாக்கங்களை விவரிப்புத்தன்மையுடன் மாத்திரமே குறிப்பிடுகின்றனவேயன்றி தாக்கங்கள் குறுகிய காலத்திற்கானவையா அல்லது நீண்ட காலத்துக்கானவையா, நேரடியானவையா அல்லது மறைமுகமானவையா மற்றும் மாற்றப்படக்கூடியவையா அல்லது மாற்றப்பட முடியாதவையா போன்ற தாக்கங்களின் வகைப்படுத்தலை உள்ளடக்கவில்லை. தாக்கங்களை வகைப்படுத்தும் அறிக்கைகளில் 24 சதவிகிதமானவை மாத்திரமே குறிப்பிட்ட வகைப்படுத்தல்களில் பயன்படுத்தப்பட்ட அளவீட்டினை வரையறுக்கின்றன. உதாரணமாக, தாக்கங்களின் பரிமாணமும் தற்காலிகத் தன்மையும் 1 முதல் 5 வரையான அளவீட்டில் குறிக்கப்பட்டால், அறிக்கைகளில் 76 சதவிகிதமானவை அளவீட்டில் உள்ள 1,2,3,4, மற்றும் 5 என்பன பரிமாணம் மற்றும் தற்காலிகத் தன்மை தொடர்பில் எதைக் குறிக்கின்றன என்பதை வரையறுக்கவில்லை. தாக்கங்களை மதிப்பிடுவதில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுத் தயாரிப்பாளர்கள் பயன்படுத்தியுள்ள தர்க்கவியலை வாசகர் புரிந்துகொள்ள முடியாத நிலையினை இது உருவாக்குகின்றது.

### *3. மிகச் சொற்பமான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளே உத்தேசத் தணிப்பு முறைகளின் செயற்திறன் பற்றியும் காரண காரியத் தொடர்பு பற்றியும் நம்பகத்தன்மையுடன் அறிக்கையிடுகின்றன*

ஆய்வு வழிகாட்டல்களில் அதிகமானவை (60%) தணிப்பு முறைகளின் செயற்திறன் மற்றும் காரண காரியத் தொடர்பு ஆகியவற்றினைச் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள்

வழங்கவேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றன. எவ்வாறாயினும், அறிக்கைகளில் 79 சதவிகிதமானவை உத்தேசத் தணிப்பு முறைகளின் செயற்றிறன் பற்றி ஒரு விபரிப்பு விளக்கத்தினைக் கூட வழங்கவில்லை என்பதுடன் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் 40 சதவிகிதமானவை மட்டுமே காரண காரியத் தொடர்புகளைத் தரவுகளுடனும் சான்றுகளுடனும் வழங்குகின்றன.

### 4. *சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள் வழிகாட்டல்கள் குறிப்பிடுபவற்றினை விட அதிகரித்த அளவில் நீண்டவையாக மாறிவருவதுடன் பொதுமக்கள் வாசித்துப் புரிந்துகொள்வதைக் கடினமாக்குகின்றன*

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளின் நீளம் அதிகரித்துவருகின்றது. சில அறிக்கைகள், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 100 பக்கம் என்கின்ற எல்லையினைத் தாண்டி எவ்வித இணைப்புக்களுமின்றி 500 பக்கங்களை எட்டுகின்றன. செறிவான தொகுப்பும் இதேபோன்ற போக்கினைக் காட்டுகின்றது. சில தொகுப்புக்கள் வழிகாட்டல் பரிந்துரைத்துள்ள 5 பக்கங்கள் என்கின்ற பரிந்துரையினைத் தாண்டி 20 பக்கங்களுக்கு நீட்சியடைகின்றன.

இணைப்புக்கள் பிரதான அறிக்கையினைப் போன்று நீளமானவையாக இருப்பதால் அல்லது அதை விட நீளமானவையாக இருப்பதால், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள் பொதுமக்களால் அணுகமுடியாதவையாக மாறிவருகின்றன என்பதையே இந்தப் போக்குகள் உணர்த்துவதுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழிகாட்டல்களும் பழமையானவையாக உள்ளன. செறிவான தொகுப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியானது, மொழி விதிகளின் படி வாசிப்பதற்குக் கடினமானதாக உள்ளது. இவற்றினை வாசிப்பதற்கான இலகுதன்மைக்கான சரசரி பிளெச் வாசிப்பு இலகுதன்மை அளவீடு 28.037 ஆகக் காணப்படுகின்றது. இது இந்தியா போன்ற சக நாடுகளின் அறிக்கைகளின் வாசிப்பு இலகுதன்மையினை விட உயர்வானதாகும்.

### 5. *தரத் தேவைப்பாடுகளுடனான ஆய்வு வழிகாட்டல்கள் சிறந்த அறிக்கைகளை உருவாக்குகின்றன ஆனால் ஆய்வு வழிகாட்டல்கள் ஒத்திசைவான தன்மையின்றி உருவாக்கப்படுகின்றன*

செம்மையானவை எனக் கூற முடியாவிட்டாலும், சில குறிப்பிட்ட அறிக்கையிடல் பரிமாணங்களைத் தேவைப்படுத்தும் ஆய்வு வழிகாட்டல்கள் அவ்வாறு தேவைப்படுத்தாதவற்றினை விடச் சிறந்த தரத்திலான அறிக்கைகளை உருவாக்கியுள்ளன. எனவே, அதிகமான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள் ஆய்வு வழிகாட்டல் தேவைப்பாடுகளைப் பின்பற்றாத போதிலும் ஆய்வு வழிகாட்டல்கள் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளின் தரத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இது, ஆய்வு வழிகாட்டலை உருவாக்கும் நடைமுறையினைத் தரப்படுத்துவதற்கான தேவையினை வலுவாக உணர்த்துவதோடு PAA-க்களில் உள்ள சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகுகளின் அமுல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு ஆற்றலை மேம்படுத்துமாறும் உணர்த்துகின்றன. ஒரே PAA-க்களால் உருவாக்கப்பட்ட ஆய்வு வழிகாட்டல்கள் மதிப்பிடப்பட்ட தரப் பரிமாணங்களில் ஆகக்கூடுதலாக ஒத்திசைவற்ற தன்மையினைக் கொண்டிருக்கும் எத்தனிப்பினைக் கொண்டுள்ளன. இந்த ஆய்வினால் ஆராயப்படும் ஆய்வு வழிகாட்டல்களின் அம்சங்கள் அறிக்கையிடல் தரத்துடன் தொடர்புடையவை என்பதாலும் அவை கருத்திட்டப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு மாறக்கூடாது என்பதாலும் கருத்திட்டத்துக்கெனத் தனித்துவமான தேவைப்பாடுகள் இருப்பதை இந்த மாறுபாட்டிற்கான காரணமாகக் கூறக் கூடாது.

### 6. *நிறுவனப் பண்புகள் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் தரத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன*

கருத்திட்ட முன்மொழிவு அரசாங்கத்தில் இருந்து வருகையில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் தரம் சிறந்ததாக உள்ளது எனப் பெறுபேறுகள் காட்டுகின்றன. அபிவிருத்திப் பங்காளர் ஒருவரின் ஈடுபாடும் சிறந்த தரத்துடன் தொடர்புறுகின்றது. குறிப்பாக, தணிப்பு நடவடிக்கைகளின் செயற்றிறனை அறிக்கையிடுவதில் தொடர்புறுகின்றது. அதிகமான சுற்றாடல்

தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள் இந்த அம்சத்தினை உள்ளடக்குவதிலேயே சிரமப்படுகின்றன. நிதியிடல் பொறிமுறை வகையின் விளைவும் கலப்புமிக்கதாக உள்ளது. முற்றுமுழுவதும் தனியாரினால் நிதியிடப்படும் கருத்திட்டங்கள் பல பரிமாணங்களின் ஊடே தரத்தின் குறைந்த மட்டங்களை உருவாக்கும் எத்தனிப்பினைக் கொண்டுள்ள அதேவேளை அரச மூலங்களில் இருந்து மாத்திரம் நிதியிடப்படும் கருத்திட்டங்கள் மற்றும் கலப்பு நிதியிடல் என்பவை சிறப்பாகச் செயலாற்றும் எத்தனிப்பினைக் கொண்டுள்ளன.

### *7. மதியுரை அணிகளின் தன்மை மற்றும் ஆக்கவமைவு என்பன சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் தரத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன*

நிறுவன மதியுரைஞர்கள் (அரசாங்கத் திணைக்களங்களின் R&D அலகுகள், மதியுரை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள்) நிறுவனத் தொடர்பினைச் சுட்டிக்காட்டியிராத சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுத் தயார்படுத்தல் அணிகளை விடத் தொடர்ச்சியாகச் சிறப்பாகச் செயலாற்றுகின்றனர். நிறுவன மதியுரை வழங்குனர்கள் தனித்துவமான முறைவடிவங்கள் மற்றும் ஆய்வு அலகுகள் போன்ற மற்றும் தரப்படுத்தப்பட்ட இயக்க நடைமுறைள் போன்ற அனுகூலங்களைக் கொண்டுள்ளமையினால் இது புரிந்துகொள்ளத்தக்கதாகும். இறுதியாக, எதிர்பார்த்ததைப் போன்று, சமூக - பொருளாதார நிபுணரை உள்ளடக்கியமை சகல தெரிவுசெய்யப்பட்ட பரிமாணங்களின் ஊடாகவும் தரத்தினை அதிகரிக்கும் எத்தனிப்பினைக் கொண்டுள்ளது.

### *8. சமூகத் தாக்கப் பகுப்பாய்வுகளை நடத்துகையில் சில அறிக்கைகள் சிறந்த நடைமுறைகளையும் நெறிகளையும் பின்பற்றுவதில்லை*

சில சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் மேற்கொள்ளப்படும் வியாக்கியானங்களும் முடிவுகளும் வறிய மற்றும் கிராமிய சமுதாயங்களுக்கு விரோதமான மொழியினைப் பயன்படுத்துகின்றன. “ஒவ்வொரு எல்லைச் சமுதாயத்திலும் காணப்படும் அதீத பற்றுக்கான எத்தனிப்புக்களும் ஆக்ரோஷமும் சட்டத்தினை மதிக்காமையும் இங்கேயும் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகின்றன. பிரதேசத்திலுள்ள சொற்பமான பாரம்பரியக் கிராமங்களும் புறத்தார்களின் இந்த வருகைப் பெருக்கத்தினால் மூழ்கியுள்ளன. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், உள்வரும் கருத்திட்டத் தொழிலாளர்களிடம் இருந்து வரும் தாக்கம் அவ்வளவு பெரியதாக இருக்காது.” இச்சந்தர்ப்பத்தில், ஏற்படக்கூடிய சாத்தியமுள்ள கருத்திட்டத் தாக்கத்தினைக் குறைத்து மதிப்பிடுவதை நியாயப்படுத்துவதற்கு சமுதாயத்தின் மீதான மிகப் பரவலான பொதுமைப்படுத்தல் பயன்படுத்தப்படுகின்றது. ஏனையவை கருத்திட்டத்துடன் தொடர்புடைய அரசியல் பிரச்சினைகளைச் சாத்தியமான தாக்கங்களாக உள்ளடக்குகின்றன. கருத்திட்ட அமைவிடத்தில் ஊழியப் படையினை அதிகரிப்பது தொழிற் சங்கங்கள் தோன்றுவதற்கும் நாட்டில் உள்ள பெரும்போக்கு அரசியல் கட்சிகளுடன் அவை தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் ஊக்கியாக அமைகின்றது என ஓர் அறிக்கை குறிப்பிடுகின்றது. தொழிற் சங்கங்கள் மற்றும் அரசியல் இயக்கங்கள் போன்ற தீவிரவாத அரசியல் செயற்பாடுகள் ஒரு பிரதேசத்திலுள்ள முதலீட்டுக் கருத்திட்டங்களின் சுமுகமான இயக்கத்திற்கு ஒரு பாரதூரமான அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம்.”

### *9. சில சமூக நலன்கள் பல சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் எவ்வித நியாயப்படுத்தல்களும் இன்றி வெளியிடப்படுகின்றன*

சமூக - பொருளாதாரத் தாக்கங்களைப் பற்றிக் கலந்துரையாடுகையில், சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் பொதுவாக நன்மைகள் பற்றிய கூற்றுக்களை மிகக் குறைவான நியாயப்படுத்தலுடன் அல்லது நியாயப்படுத்தலே இல்லாமல் வெளியிடுகின்றன. அடிக்கடி தென்படுகின்ற அவ்வாறான இரண்டு நன்மைகள் தொழில் நன்மைகளும் கருத்திட்டங்களால் சொத்துக்களின் பெறுமதியில் ஏற்படுத்தப்படும் அதிகரிப்புக்களுமாகும். மேலும், சில சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள் கருத்திட்ட முன்மொழிவாளரின் அல்லது அபிவிருத்தியினை ஏற்படுத்துபவரின் உத்தேச பெருநிறுவனச் சமூகப் பொறுப்பு (CSR) முன்னெடுப்புக்களைச் சமூக - பொருளாதார நலன்களாகச் சமர்ப்பிக்கின்றன. கருத்திட்ட முன்மொழிவாளரின் அல்லது அபிவிருத்தியாளரின் தனியுரிமையின் அடிப்படையில் தன்னார்வத்துடன் மேற்கொள்ளப்படும் இவ்வாறான பெருநிறுவனச் சமூகப் பொறுப்பு

முன்னெடுப்புக்கள் உத்தேசக் கருத்திட்டத்தினால் உருவாக்கப்பட்ட அவ்வாறான நன்மை பயக்கும் விளைவுகளாக இருக்கின்றனவா என்பது தெளிவற்றதாக உள்ளது.

*10. **சில சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் வெவ்வேறு சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளில் உள்ள தாக்க விபரிப்புக்களை அப்படியே மாற்றமின்றிப் பயன்படுத்துகின்றன.***

வெவ்வேறு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் உள்ள தாக்கக் கூற்றுக்களின் மாதிரியினை அப்படியே ஒரே மதியுரைஞர்கள் அல்லது வெவ்வேறு மதியுரைஞர்கள் பயன்படுத்திய பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான ஒரு கூற்று 9 வருட காலப்பகுதியில் வெளியிடப்பட்ட 5 சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் காணப்பட்டது (எவ்வித மாற்றமுமின்றி). ஆதாரமற்ற தாக்க விபரிப்புக்களை அப்படியே பிரதி செய்து பதிலீடு செய்வது கருத்திட்டத்துக்குரியதான எவ்விதமான பயன்மிக்க தகவல்களையும் சேர்க்காததன் மூலம் அறிக்கைகளை வெறுமனே சொற்கள் நிரம்பி வழிவதாக ஆக்குகின்றது

*11. **சமூக – பொருளாதாரக் கணிப்பீடுகளின் இணைப்புக்களும் அட்டவணைகளும் தனிப்பட்ட அடையாளப்படுத்தல்களையும் இரகசியமான தகவல்களையும் வெளிக்கூறுகின்றன***

இறுதியாக, பல சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள் இவ்வாறான தகவல்களை பிரதான அறிக்கையில் அல்லது இணைப்புக்களில் உள்ளடக்குகின்றன. அதிகமான சந்தர்ப்பங்களில் இவை கணிப்பீட்டிலும் நேர்காணல்களிலும் பதிலளித்தவர்களின் தனிப்பட்ட தகவல்களை வெளிக்கூறுகின்றன. இவ்வாறான தகவல்களுள் பெயர்கள், வதிவிட முகவரிகள், வருமானத் தகவல்கள், காணிப் பெறுமதி, அசையாச் சொத்துக்களின் பெறுமதி, தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன. இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை அற்பமானதல்ல. பொதுவாக இது நூற்றுக்கணக்கானவர்களை விஞ்சுகின்றது.

## மறுசீராக்கல் முன்னுரிமைகள்

### 1. சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளின் தரக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையினை வலுப்படுத்தல்

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையிடலின் தரம் தொடர்பாக வருடாந்த மதிப்பீட்டினை நடத்துவதற்கு அதிகாரிகள் ஒரு செயன்முறையினைத் தாபிக்க வேண்டும் என்பதுடன் தொடர்ச்சியான சமூக – பொருளதார நிபுணத்துவத்திற்கான சிறந்த அணுகலைக் கொண்டிருக்க வேண்டும். சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுக்கான வழிகாட்டல்களின் பிரயோகிக்கத்தக்க தன்மை தற்போது நிலவும் சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் கட்டாயம் தெளிவுபடுத்தப்பட்டு வழிகாட்டல்கள் நவீனமயமாக்கப்படல் வேண்டும். சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் தனிப்பட்ட மற்றும் இரகசியமான தகவல்களின் பயன்பாட்டினையும் முகாமைத்துவத்தினையும் ஒழுங்குறுத்துவதற்கு ஒரு கொள்கை கட்டாயம் தாபிக்கப்பட வேண்டும். ஆய்வு வழிகாட்டல்களின் உருவாக்கம் கட்டாயம் தரப்படுத்தப்பட வேண்டும்.


### 2. மதியுரைஞர்களின் மத்தியில் சமூக – பொருளாதாரப் பகுப்பாய்வுக்கான ஆற்றல்களை மேம்படுத்தல்

பயிற்சியானது சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளுக்கு ஏற்புடையதான சமூக – பொருளாதாரப் பரிசீலிப்புக்களின் எல்லைகள் தொடர்பான கூறுகளையும் முதன்மைத் தரவுகளையும் இரண்டாம் நிலைத் தரவுகளையும் பயன்படுத்தி அனுபவப்பூர்வமான ஆய்வுகளை நடத்தி அறிக்கையிடுவதற்கான உத்திகளையும் - பொருத்தமான மேற்கோள் காட்டல் பாங்குகளை அவற்றுள் உள்ளடக்கி - முதன்மைத் தரவுகளின் சேகரிப்பு மற்றும் வியாக்கியானம் பற்றிய நெறிகளையும் கட்டாயம் உள்ளடக்க வேண்டும்.

### 3. பொதுமக்களுக்காகவும் பிரதான பங்குதாரர்பங்குதாரர்களுக்காகவும் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளை அணுகக்கூடிய தன்மையினை மேம்படுத்தல்

செறிவான தொகுப்புக்கள் அவற்றில் பயன்படுத்தப்படும் கட்டமைப்பு மற்றும் மொழி உள்ளடங்கலாகக் கட்டாயம் தரப்படுத்தப்படல் வேண்டும். இதனால் முக்கியமான தகவல்கள் எதிர்வுகூறக்கூடிய வகையிலும் அணுகத்தக்க வகையிலும் வழங்கப்படுகின்றன. கணிப்பீட்டு மாதிரிகளைத் தயாரிப்பதற்கான முறையியல்கள் மற்றும் மதியுரைகளில் பொருத்தமான பங்குதாரர்களை உள்ளடக்குதல் போன்ற சமூக – பொருளாதாரப் பகுப்பாய்வின் இன்றியமையாத அம்சங்களைப் பரிசீலிப்பதற்கு உதவுவதற்காகப் பொதுமக்களுக்கான கருவித்தொகுதிகள் கட்டாயம் இற்றைப்படுத்தப்படல் வேண்டும்.

**உரு 1: பகுப்பாய்வின் வகையின் அடிப்படையில் கண்டறிந்தவை பற்றிய சுருக்கமான விளக்கம்**



**அட்டவணை 1: பரிந்துரைகளின் அட்டவணை**

| பரிந்துரை | சம்பந்தப்பட்ட பிரதான பங்குதாரர்கள் |
|---|---|
| 1. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறையின் ஆளுகை, முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு | |
| 1.1. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையிடல் பற்றிய முறைமைவாய்ந்த கண்காணிப்பினையும் மதிப்பீட்டுப் பொறிமுறையினையும் உருவாக்கல் | CEA, PAAs |
| 1.2. தொடர்ச்சியான சமூக–பொருளாதார நிபுணத்துவத்திற்கான PAA மட்ட அணுகலை அதிகரித்தல் | CEA, PAAs, மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் |
| 1.3. மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழிகாட்டல்களின் ஏற்புடையதன்மையினை மதிப்பிட்டு அதை வகுத்துத் திருத்துதல் | CEA |
| 1.4. ஆய்வு வழிகாட்டல் முறைவடிவங்களைத் தரப்படுத்தி, ஒழுங்குறுத்தி அவற்றினை உருவாக்கும் நடைமுறைகளை அறிக்கையிடல் | CEA, PAAs |
| 1.5. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் தனிப்பட்ட தகவல்களின் பயன்பாடு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக ஒரு கொள்கையினை அறிமுகப்படுத்தல் | CEA |
| 1.6. ஆய்வு முறைவடிவங்கள் பற்றிய வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தல் | CEA, PAAs |
| 2. சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளை நடத்துவது பற்றிய தொழிற்றுறை ரீதியான நடைமுறைப் பயிற்சி, பயிற்சி, மற்றும் அறிவுப் பகிர்வு | |
| 2.1. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பயிற்சி மற்றும் தகைமை ஆவணங்களில் சமூக – பொருளாதாரப் பகுப்பாய்வுகள் பற்றிய கூறுகளை அறிமுகப்படுத்தல் | CEA, பல்கலைக்கழகங்கள், கைத்தொழிற் சங்கங்கள், தனியார் துறை மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் |
| 2.2. நிறுவன ஒத்துழைப்பின் மூலம் இலங்கைச் சமூக – பொருளாதார ஆவணங்களுக்கான அணுகலை அதிகரித்தல் | CEA (NEIC), பல்கலைக்கழகங்கள், மற்றும் விடயங்களுக்குப் பொறுப்பான சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் |
| 3. பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் கண்காணிப்பு | |
| 3.1. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் சமூகத் தாக்கங்களின் துரிதமான மதிப்பீடுகளுக்காக மும்மொழிக் கருவித் தொகுதிகள் | சிந்தனைக் கருவூலங்கள், CSOs, NGOs, மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் |
| 3.2. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளைப் பயன்படுத்துவது மற்றும் மதிப்பிடுவது தொடர்பாக ஊடகத்திற்கும் பத்திரிகையாளர்களுக்கும் பயிற்சி வழங்கல் | சிந்தனைக் கருவூலங்கள், CSOs, NGOs, மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் |
| 4. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் வழங்குனர்களின் பரிசீலிப்புக்கள் | |
| 4.1. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் உள்நாட்டு நடைமுறைகள் தொடர்பான அபிவிருத்திப் பங்காளர்களின் தேவைப்பாடுகளையும் செயன்முறைகளையும் அறிவித்தல் | அபிவிருத்திப் பங்காளர்கள் |
| 4.2. தாக்கக் கோரிக்கைகளின் தரம் மற்றும் உண்மைத்தன்மையினை மதிப்பிட்டு அறிக்கையிடுவது தொடர்பில் கருவித் தொகுதிகளை அறிமுகப்படுத்தல் | நிதி அமைச்சு, மற்றும் உள்நாட்டு நிதி நிறுவனங்கள் |

## Participant Notes

To explore more, read the full report
available on the CSF Website

**Centre for a Smart Future (CSF) is a Colombo-based think tank with researchers, advisors, and partners around the world.**

We conduct high-quality research, promote collaboration across disciplines, and generate actionable ideas. Our current work is anchored to influencing a just recovery from Sri Lanka's polycrisis, with the environment and human well-being at the core. Our research has partnered with organisations such as Institute of Development Studies, London School of Economics, International Labour Organization, Open Society Foundations, Blue Resources Trust, Parliament of Sri Lanka, and Biodiversity Sri Lanka. What sets us apart is our interdisciplinary approach to research and policy advocacy. We like being imaginative in how we think about challenges and solutions.

We continually engage with a spectrum of stakeholders - from local communities to policymakers - which ensures that our research is relevant and accessible to a broad audience, while also contributing to meaningful policy change.

**A publication under CSF's thematic pillar on: Nature, Climate and the Economy**

We conduct research, convene stakeholders, and communicate policy imperatives for putting nature and natural capital at the core of Sri Lanka's post-crisis economic recovery, and its medium-term development pathways.

Ongoing work includes innovative financing for conservation and a green recovery, strengthening financial institutions' environmental integration, nature-positive tourism, and reorienting growth towards better considerations of natural capital.

@CSFasia
@centreforasmartfuture
@csfasia
@centreforasmartfuture

www.csf-asia.org